## பிற்பட்டோருக்கு 50 சதவீத இடம் ஒதுக்க தடை:

# இட ஒதுக்கீடு இல்லாமல் உள்ளாட்சி தேர்தல்!

## அமைச்சர் கோ.சி.மணி மசோதா தாக்கல்!!



கோ.சி.மணி

சென்னை, ஜூன் 1- ஐகோர்ட்டு தீர்ப்பினால் இட ஒதுக்கீடு இல்லாமல் உள்ளாட்சி தேர்தலை நடத்த வகை செய்யும் மசோதாவை சட்டசபையில் அமைச்சர் கோ.சி. மணி தாக்கல் செய்தார்.

சட்டசபையில் நேற்று நகராட்சி, உள்ளாட்சி, தேர்தலை நடத்துவதற்கான மசோதாக்களை அமைச்சர் கோ.சி. மணி தாக்கல் செய்தார். அந்த மசோதாவில் கூறி இருப்பதாவது:-

### தேர்தல் ஏற்பாடு

இம்மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி மன்ற தனி அலுவலர்களின் பதவி காலம் ஜூன் 30-ந்தேதியுடன் முடிவடைவதாக இருக்கிறது. உள்ளாட்சி தேர்தல்களை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாநில தேர்தல் ஆணையம் செய்து வருகிறது. இதற்கிடையே நூற்றுக்கு 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்ததை எதிர்க்கும் மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

### ஐகோர்ட்டு தீர்ப்பு

நீதிமன்ற தீர்ப்பில் பிற்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செல்லாது என தீர்ப்பளித்துள்ளது. இதன் காரணமாக இப்போது இங்கே பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த குடிமக்களுக்கு ஆதரவாக இடஒதுக்கீடு செய்யாமல் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தலை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது.

எனவே உள்ளாட்சி மன்ற தனி அதிகாரிகளின் பதவி காலம் 1996-ம் ஆண்டு டிசம்பர் 31-ம்நாள் வரையிலோ, அல்லது அரசு குறித்து உரைக்கக்கூடிய குறுகிய கால அளவிற்கான மேலும் ஒரு கால அளவிற்கு நீட்டிக்க வேண்டியது தேவையாகிறது.

இவ்வாறு அந்த மசோதாவில் கூறப்பட்டு உள்ளது.

### தடைக்கற்கள் நீக்கம்

சுப்பராயன் (இந்திய கம்யூ):- இந்த சட்ட முன்வடிவுகள் தாமதமாக எங்கள் கைக்கு வந்துள்ளது. இதை முன்கூட்டியே எங்களுக்கு அனுப்பி இருக்க வேண்டும்.

அமைச்சர் அன்பழகன்:- இந்த சட்டம் கட்டாயமான சூழ்நிலையில் உடனே செய்து தீர வேண்டிய கடமையாக இருக்கிறது. ஏற்கனவே உள்ள சட்டங்களில் தடைக்கற்கள் உள்ளன. அந்த தடைகளை நீக்கும் பிரிவுகளை இந்த சட்டங்கள் கொண்டிருக்கின்றன.

சபாநாயகர்:- சட்ட முன்வடிவு இன்று காலைதான் வந்தது. இனிமேல் இவை கால தாமதமின்றி சபாநாயகர் அலுவலகத்திற்கு வந்து சேர வேண்டும்.

### அ.தி.மு.க. எதிர்ப்பு

திருநாவுக்கரசு (அ.தி.மு.க):- சுப்பராயன் கூறியதை தொடர்ந்து இந்த மசோதாவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன். நாங்கள் வந்தவுடன் உள்ளாட்சி தேர்தல் தேதியை தெரிவிப்போம் என்றீர்கள். தனி அதிகாரிகள் பதவி காலத்தை நீட்டிப்பதை எதிர்க்கிறேன். நீங்கள் தேர்தலின் போது தந்த வாக்குறுதிக்கு மாறாக இது அமைந்திருக்கிறது.

### ஆட்சேபம் இல்லை

சுப்பராயன்:- நான் மசோதா அறிமுகப்படுத்துவதை ஆட்சேபிக்கவில்லை. முன்கூட்டி உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என்றுதான் கூறினேன்.

அமைச்சர் அன்பழகன்:- நீட்டிப்பது என்றால் 6 மாதத்திற்கு என்று அறிவிப்பதுதான் வழக்கம். உள்ளாட்சி தேர்தல் முடிந்து மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புக்கு வந்ததும் அதிகாரிகள் தானாக விலகி கொள்ளும் நிலை ஏற்படும். அல்லது அவர்களுக்கு கட்டுபட்டு நடக்கும் நிலை ஏற்படும். இது திருநாவுக்கரசுக்கு தெரிந்து இருக்கும்.

இவ்வாறு இந்த விவாதம் முடிந்தது.